MAALAI MALAR 25 SEP 2010

# மதுரையில் நாளை பசுமை இயக்க விழா

## சத்குரு ஜகி வாசுதேவ் பேசுகிறார்

மதுரை, செப். 25-
மதுரையில் நாளை பசுமை இயக்க விழாவில் சத்குரு ஜகி வாசுதேவ் பேசுகிறார்.

இது குறித்து ஈஷா யோகா மையத்தின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ரமேஷ் நிருபர்களிடம் கூறியதாவது:-

### பசுமை இயக்கம்

ஈஷா பசுமை கரங்கள் திட்டம் என்பது சத்குருவின் எண்ணத்தில் தோன்றி உருவாக்கப்பட்டதாகும். இந்த மாபெரும் மரம் நடும் இயக்கம் தேசிய கொள்கையான 33 சதவீத பசுமை பரப்பை உருவாக்க முனைந்துள்ளது.

வருகிற 2015-ம் ஆண்டுக்குள் 11.4 கோடி மரக்கன்றுகளை நட திட்டமிட்டுள்ளோம். தமிழகத்தில் இன்னும் 3 மாதங்களில் 16 இடங்களில் மரக்கன்றுகளை நட உள்ளோம்.

### ஆனந்த அலை

மதுரை தமுக்கம் மைதானத்தில் இதற்கான விழா நாளை (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு நடக்கிறது. சத்குரு ஜகி வாசு



தேவ் கலந்து கொண்டு தொடங்கி வைக்கிறார். இதைத்தொடர்ந்து ஆனந்த அலை நிகழ்ச்சி நடக்கிறது. இதில் சத்குரு ஜகி வாசுதேவ் பேசுகிறார்.

விழாவில் கலெக்டர் காமராஜ், ஐ.ஜி.கிருஷ்ணமூர்த்தி, மேயர் தேன்மொழி உள்பட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்கிறார்கள்.

விழாவுக்கு வரும் அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்க உள்ளோம். மதுரையில் இந்த ஆண்டு இறுதிக்குள் 1 லட்சம் மரக்கன்றுகளை வழங்கிட உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.